Y.M.C.A

# காங்கேசன்துறை மீனவக் குடும்பங்களுக்கு நிவா்ரண முத்திரை வழங்குமாறு கோரிக்கை

காங்கேசன்துறையைச் சேர்ந்த சுமார் 500 கடற்றொழிலாளர் குடும்பங்கள் சகல உடைமைகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகி இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இந்நிலை குறித்து காங்கேசன் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு நேற்று யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்து விபரித்தது. இப்பகுதியிலுள்ள சகல கடற்றொழிலாளர்களின் மீன்பிடி வள்ளங்கள், வலைகள், இருப்பிடங்கள், உடைமைகள் அனைத்தும் இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாகவும், இவர்கள் அனைவரும் இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரணம் போதாதென்றும் மீனவர் நிவாரண முத்திரை வழங்க வேண்டும் என்றும் அரச அதிபரிடம் எடுத்துக் கூறப்பட்டது. அரசாங்க அதிபர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (66)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 05 ஒலி 02 பிரமோதூத கார்த்திகை 13 (29-11-1990) வியாழன்

# வடக்கு கிழக்கு மாகாணத்தில் 8 லட்சம் அகதிகள்

## புனர்வாழ்வு அமைச்சு தகவல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அகதிமுகாம்களில் மட்டும் சுமார் ஏழு லட்சத்து முப்பத்தையாயிரம் தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

புனர்வாழ்வு புளரமைப்பு அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்ற புள்ளி விபரங்களின் படி நாட்டில் கடந்த அக்டோபர் மாதம்வரை மொத்தம் எட்டு லட்சத்து பதசொன்பதினாயிரத்து எழுநூறு அகதிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் யாழ் மாவட்டத்தில் மட்டும் 352 அகதி முகாம்களில் 71 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 55 ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளனர்.

இராணுவ நடவடிக்கையால் குடாநாட்டின் கரையோரங்களிலிருந்தும், தீவுப் பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து தனியார் வீடுகளில் தங்கியிருப்போரும் இக்கணக்கில் சேர்க்கப்படவில்லை.

அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் அக்டோபர் மாதத்திற்குரியது. ஆனால் நவம்பர் மாதம் முடிவடையும் தறுவாயில் அகதிகள் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது (66)

## இப்படியும் ஒரு நிவாரணம்

நிவாரண உணவுப் பொருட்கள் வழங்கப்படவிருப்பதாகக் கூறி நெடுந்தீவு, அனலை தீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் இருந்து மூவாயிரத்திற்கும் அதிகமானோர் கடந்த வெள்ளிக்கிழமை படகுகள் மூலம் நயினாதீவுக்குக் கொண்டுவரப்பட்டனராம். தமக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கவிருக்கின்றன என்ற குதூகலத்துடன் சாக்கு, வெற்று உரப்பைகளுடன் நயினாதீவுக்கு இவர்கள் வந்த — 4 ஆம் பக்கம் பார்க்க

## ரயில்வே பகுதி ஓய்வூதியம் வவுச்சர்கள் தபாலில் வரும்

புகையிரதப்பகுதி ஓய்வூதியம் பெறுவோர்களுக்கான ஆடி ஆவணி மாத வவுச்சர்கள் முன்பு அறிவிக்கப்பட்டபடி சிலர் உரிய இடத்தில் பெற்றுக் கொள்ளத் தவறி விட்டார்கள்.

இவர்களின் வவுச்சர்கள் தற்போது தபால் மூலம் உரிய விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (66)

## கிளிநொச்சியில் ஹெலித் தாக்கு

கிளிநொச்சி நகரின் பல பகுதியிலும் நேற்றுப் பகல் ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாகத் தாக்குதல் நடாத்திச் சென்றது. சேதம் எதுவும் இடம்பெறவில்லை. (ப24 71)

## சேதமடைந்த ஆலயங்களின் விபரங்க்ள் சேகரிக்கப் பணிப்பு

வன்செயல்கள் காரணமாக சேதமடைந்த சமய வழிபாட்டுத்தலங்களின் விபரங்கள் தற்போது கல்வி கலாசார விளையாட்டு அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதியில் இருந்து இன்று வரை இவ்வாறு சேதமடைந்துள்ள இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த ஆலயங்களின் விபரங்கள் அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிப —4 ஆம் பக்கம் பார்க்க

## உணவு விநியோகத்திற்காக ஊரடங்கை தளர்த்தக் கோரிக்கை

ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தி கப்பலில் இருந்து உணவுப் பொருட்களை இறக்கவும், இறக்கப்பட்ட உணவுப் பொருடகளை யாழ் குடாநாட்டிலுள்ள ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு சென்று கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்குப்பகிர்ந்தளிக்க வழி செய்யுமாறு யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தையும், பாதுகாப்பு அமைச்சரையும் கேட்டுள்ளார்.

இதேவேளை அடுத்துவரும் கப்பலில் இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் பணம் அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதாகவும் —4 ஆம் பக்கம் பார்க்க

## வலி. கிழக்கில் பரவலாகக் ஹெலி சூடு

நேற்று வலிகாமம் கிழக்கு வடபகுதியில் பரவலாக ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள மேற்கொள்ளப்பட்டன. கொட்டகப்புலம், வளலாய், அச்சுவேலி, தொண்டமானாறு, வாதரவத்தைப் பகுதிகளில் இத்தாக்குதல்கள் மேற் —4 ஆம் பக்கம் பார்க்க

## இரவு நேரம் விமானத் தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு குடாநாட்டின் பல இடங்களிலும் செஸ்னா 337 கடல் விமானம் தாக்குதல்களை மேற்கொண்டன

மாதகல்புனிததோமையார் ஆலயப் பகுதியில் திருமதி தேவரத்தினம் 47) லீலா தேவசகாயம் (45) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

வேலணையில் யோ திருமாறன் (16, வி. வித்தகன் (16) ஆகியோர் காயமடைந்தனர். சுன்னாகத்தில் அ.ரவிச்சந்திரன் என்பவரும் காயமடைந்தார். (ப 20,13,19)

## மாங்குளம் முகாம் தாக்கப்பட்ட வேளை

## 11 அதிகாரிகள் 299 சிப்பாய்கள் முகாமில் இருந்தனராம்

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டபோது அங்கு பதினொரு இராணுவ அதிகாரிகளும் 299 சிப்பாய்களும் இரு அணிகளாக நிலை கொண்டிருந்தனர். இத்தகவலை பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்றுத் தெரிவித்தார். மாங்குளம் இராணுவம் பின்வாங்கியதை அவர் ஒப்புக்கொண்டார்

இதேவேளை தென்னிலங்கையில் தற்போது கைது செய்யப்படுபவர்கள் ஜே. வி. பியினர் அல்ல, அவர்கள் கொள்ளையர்களே எனவும் அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார்.

## சுன்னாகம், கீரிமலை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்

பலாலியிலிருந்து நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட ஏழு ஷெல்கள் சுன்னாகத்தில் விழுந்து வெடித்தன.

இதனால் பல வீடுகள், கடைகள், கத்தோலிக்க ஆலயம், சந்தைமாடிக் கட்டிடம் என்பன சேதமடைந்தன.

அ. ரவிச்சந்திரன்(22), பாலகுமார்(26), பா. ஜெகசோதி(45), பா. ஜெயபானு(16) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

காங்கேசன் இராணுவ முகாமிலிருந்து கீரிமலையை நோக்கி அடிக்கடி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

நேற்றுக் காலையும் பலத்த —4 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை. வவுனியாமாவட்டங்களில் கடும் விமானத்தாக்கு; 9 பேர் பலி

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டானில் நேற்று முன்தினம் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளன.

இத்தாக்குதலில் 9 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர். அத்துடன் சிவன்கோவில், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் போன்றனமுற்றாக சேதமடைந்தன.

இதில் கொல்லப்பட்டவர்கள் விபரம் வருமாறு,

மகாலிங்கம் வாப்பா (27) பூதம்வயல் முள்ளியவளை தம்பிராசா செல்வராசா (25) காஞ்சிமடு ஒட்டுசுட்டான், செல்வன் விக்கினேஸ்வரன் (23) புதுக்குளம், அருணாசலம் (65), அருணாசலம் கபிதா (12) (தகப்பனும் மகளும்) கொலனி மாங்குளம், தங்கராசா சிவதரன் (18) 1-ம் கட்டை ஒட்டுசுட்டான், சுப்பிரமணியம் கவிதன் (23) சிவன் கோவிலடி, ஒட்டுசுட்டான், வேலுப்பிள்ளைசிவராணி 13) முள்ளியவளை, மகேந்திரன் —4 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதல்கள் மத்தியிலும் வேலணையில் மாவீரர் நிகழ்ச்சி

நேற்று முன்தினம் மாவீரர் தினத்தை முன்னிட்டு வேலணையில் மாபெரும் வைபவம் ஒன்று நடைபெற்றது.

இவ்வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது சீ-பிளேன் சுட்டதில் இருவர் காயமடைந்தனர். மக்கள் பதட்டமடையாது கூட்டத்தினை தொடர்ந்து நடாத்துமாறு விடுதலைப்புலிகளிடம வேண்டுதல் விடுத்ததை யடுத்து தொடர்ந்து கூட்டம் —4 ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# மகாபொல புலமைப்பரிசுக்கு

# 495 மாணவர்கள் தெரிவு!

யாழ் பல்கலைக்கழகத்தில் 1989 -90 -ம் கல்வியாண்டுககு தெரிவான மாணவர்களுள் 495 பேருக்கு மகாபொலப் புலமைப்பரிசில் கிடைத்துள்ளது.

கலைப்பிரிவில் 151 பேருக்கும், பௌதிக விஞ்ஞான பிரிவில் 94 பேருக்கும், உயிரியல் விஞ்ஞான பிரிவில் 39 பேருக்கும், மருத்துவ பீடத்தில் 48 பேருக்கும், விவசாய பிரிவில் 16 பேருக்கும், முகாமைத்துவ பிரிவில் 69 பேருக்கும், வர்த்தகப்பிரிவில் 78 பேருக்கும் மகாபொலப் புலமைப்பரிசில் கிடைத்துள்ளது.

இவர்களுக்கு நவம்பர் மாதம் முதல் புலமைப்பரிசில் பணம் வழங்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாபொலப் புலமைப்பரிசில் கிடைக்காத புதிய பல்கலைக்கழக மாணவருக்கு உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது. இந்த உதவிப்பணம் பெறத் தகுதியான மாணவர்களின் விபரம் விரைவில் அறிவிக்கப்படுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## தென்மராட்சியில் இரவுவேளை கடும் தாக்குதல்

நேற்று முன்தினம் மாலை தென்மராட்சிப் பகுதியில் கடல் வேவு விமானமொன்று பல தடவைகள் பரவலாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததினால் பலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் கொடிகாமம் சந்தியில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதில் பலர் காயமடைந்தனர். எழுதுமட்டுவாளைச் சேர்ந்த சின்னத்துரை அசோக்குமார் (40) என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரியிலும் இந்த வேளை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் இரவு 11 மணி போல் மீண்டும் கடல் வேவு விமானமொன்று கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளில் பரவலாக வேட்டுக்களைத் தீர்த்தது. (ப-26, ப-32)

### யாழ் போதனா வைத்திய சாலையில்

## பெரிய சத்திர சிகிச்சைக் கூடம் அடுத்தவாரம் முதல் இயங்கும்

யாழ் போதனா வைத்திய சாலையின் பெரிய சத்திர சிகிச்சைக் கூடம் மீண்டும் அடுத்த வாரம் முதல் இயங்கவுள்ளது.

கடந்த ஒரு மாதமாக இங்கு சிறிய சத்திர சிகிச்சைக் கூடமே இயங்கி வருகிறது. இராணுவ நடவடிக்கையால் பெரிய சத்திர சிகிச்சைக் கூடம் சேதமடைந்திருந்தது தெரிந்ததே.

திருத்த வேலைகள் அடுத்த வாரம் முடிவடைந்தவுடன் உடனடியாக இக்கூடம் இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (74)

### ஆசிரிய பயிற்சிக் கலாசாலை

## நேர்முகப் பரீட்சை முடிந்தபின் அழைப்புக்கடிதங்கள் இங்குவந்தன

1991-ம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்காக விண்ணபபித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சை கடந்த 16-ம் திகதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

ஆனால் யாழ் மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு இதற்கான அறிவிப்புக் கடிதங்கள் தபால் சேவை சீர்கேடு காரணமாகக் குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தியே கிடைத்துள்ளன. (33)

### காயமுற்றோர் 'வார்ட்'

## வெகுதொலைவில்; அவசர சிகிச்சையில் தடங்கல்

கூடிய இரத்தப் பெருக்குடன் ஏற்படும் காயங்களுக்குள்ளாகிய நோயாளிகளை அனுமதிக்கும் 'வாட்' யாழ் போதனா வைத்தியசாலையின் ஆரம்ப வாயிலில் இருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ளதால் நோயாளிகளுக்கு பேரபாயம் ஏற்படும் நிலை உள்ளது எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளிகளைப் பரிசோதித்து வார்ட்டுக்கு அனுப்புவதற்கு முன்னதாக அவசர சிகிச்சை பிரிவு, சத்திர சிகிச்சைக்கூடம் எக்ஸ் கதிர்ப் பிரிவு ஆகியன வைத்திய சாலையின் முன்புறம் உள்ளன.

குறிப்பிட்ட நோயாளியை மேற்படி வாட்டுக்கு 'ஸ்றெச்சர்' மூலம் கொண்டு செல்வதற்கு இடையில் கூடிய இரத்தப்பெருக்குஏற்படுவதும் கொண்டு செல்லும் பாதை சமநிலை அற்றதாக இருப்பதால் நோயாளி பெரும் அவஸ்தைப்படுவதும் சுட்டிக் காட்டப்படுகிறது (74)

## வீமன்காமம் மாணவருக்கு

வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் க. பொ. த. (சா. த) மாணவர்கள் இவ்வருடம் டிசம்பர் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பினால் பாடசாலை அதிபரை இன்று அவரது இல்லத்தில் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### நல்லூர் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள்

## தமது ஒரு நாள் சம்பளத்தை கிழக்கு அகதிகளுக்கு வழங்குவர்

மாவீரர் நினைவுநாளையொட்டி நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல பணியாளர்களும் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் அகதிகளுக்கு வழங்குவதற்குதீர்மானித்துள்ளார்கள்.

அத்துடன் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க நல்லூர் கிளையினர் தங்கள் நிதியில் இருந்து மேலும் இரண்டாயிரம் ரூபாவை கிழக்குமாகாண அகதிகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளதாக அதன் தலைவர் கு. அருள்நாயகம் தெரிவித்துள்ளார். (53)

## சம்பளம், பென்சன் இனி பணமாகக் கிடைக்கும்

யாழ். குடா நாட்டிலுள்ள அரச ஊழியர்கள், ஓய்வூதியக் காரர்களுக்கு கொடுப்பனவுகளை கரன்ஸி நோட்டுகளாக உடன் அனுப்புமாறு அரசாங்கம் பணித்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அரச ஊழியர்களும் ஓய்வூதியக் காரர்களும் அடைந்து வந்த துயர் நீங்கும் மார்க்கம் ஏற்பட்டுள்ளது எனவும்தெரிவிக்கப்படுகிறது.

## மாத்தளை மாவட்டத்தில் 'காலரா' பரவுகின்றது

ரத்தோட்டையில் கடந்த வாரம் ஏற்பட்ட 'காலரா தற்போது மாத்தளை மாவட்டம் முழுவதும் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட பெருந்தொகையானோர் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இம்மாவட்டத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள், ஐஸ்கிறீம் கடைகளை மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.


### சிறு விளம்பரம்

**சேவை**

நல்லூரில் தரமான தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும்,பாஸ்போட், அடையாள அட்டை புகைப்படங்கள் பிடிக்கவும் கறுப்பு வெள்ளைப் படங்களை 12''X10'' அளவிற்கு பெரிதாக்கவும் நாடவேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல. 351,கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்) நல்லூர். 11115


# சிறிய செய்திகள்

## மாவீரர்கள் நினைவாக

யாழ் பல்கலைக்கழகத்தில் மாவீரர்தினம் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினால் பலநிகழ்ச்சிகள் மாவீரர் தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் மாலை யாழ் பல்கலைக்கழகத்தில் பல மாணவர்கள் முன்னிலையில் தமிழீழ தேசியக் கொடி இறக்கப்படடது இவ்வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (16)

★ ★ ★

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கம் கோப்பாய் பிரதேச விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் ச. பாலன் தலைமையில் மாவீரர் தின நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

மாவீரர் வாரம் முழுவதும் மாலையில் சங்க மண்டபத்தில் மாவீரர் கலை நிகழ்ச்சிகளும், கூட்டமும் நடைபெற்றன.

இந்த தொடர் கூட்டங்களில் சிறப்புப்பேச்சாளர்களாக கோப்பாய் பொறுப்பாளர் ச. பாலன், யாழ் மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர், அருண்மாஸ்டர், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி மாலினி ஆகியோர் கலந்து கொண்டனர்

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் முன்னணி பேச்சாளர்களாக கலந்து கொண்ட மாவீரர் வார நிகழ்ச்சிகளில் முறைசாராப் பிரிவு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (33,53)

★ ★ ★

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் மாவீரர் நினைவாக வர்த்தகர் சங்கத்தினால் அமைக்கப்பட்ட பார்வையாளர் மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி கச்சாய் வீதி முதலாம் கட்டைப் பகுதியில் 'பாலர்பாடசாலை' ஒன்றும் மாவீரர்கள் நினைவாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ப-32)

★ ★ ★

கந்தர்மடம் சனசமூகநிலைய ஆதரவில் மாவீரர் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் யாழ் மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் கலந்து கொண்டார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## உலர்உணவு அட்டை விநியோகம்

வலிகாமம் வடக்கு வறுத்தலை விளான் கிராம சேவையாளர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான உலர் உணவு அட்டைகள் அவர்கள் தற்பொழுது குடிபெயர்ந்திருக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்கள்மூலம் இடம் பெயர்ந்துள்ள வறுத்தலை விளான் பகுதி மக்கள் தத்தமக்குரிய உலர் உணவு நிவாரண அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு வறுத்தலை விளான் கிராமசேவையாளர் கே. கனகநாயகம் கேட்டுள்ளார். (33)

## சண்டி டெஸ்ட் இந்தியா வெற்றி

இந்திய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் சண்டி நகரில் நடைபெற்ற முதலாவது கிரிக்கற்டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இனிங்சாலும் எட்டு ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இருநூற்றி எண்பத்தெட்டு ஓட்டங்களை குவித்து ஆட்டம் இழந்தது. இதில் ரவி சாஸ்திரி பெற்ற ஓட்டங்கள் எண்பத்தாறு. இலங்கை அணி அதன் துடுப்பெடுத்தாட்டத்தில் முதல் இனிங்ஸில் நூற்றித்தொண்ணூற்றி எட்டு ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

டெஸ்ட் தொடரில் இதுவரை காலமும் இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஏழு போட்டிகளில் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவும், ஒரு போட்டியில் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன. நாலு போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளன.

இப்போட்டியில் கபில்தேவ் கைப்பற்றிய விக்கற்றுகளுடன் அவர் கைப்பற்றிய விக்கற்றுகளின் எண்ணிக்கைமுந்நூற்றி எழுபத்தாறு ஆக உயர்ந்துள்ளது.

இது ஈ. எம். மோத்தம் என்பவரின் உலக சாதனைக்கு சமமானது என்பதும் அசூருடீன் தலைமையின் கீழ் இந்திய அணி பெற்ற முதலாவது வெற்றி என்பதும் குறிப்பிட வேண்டியவைகளாகும். (16)

## கூட்டுறவாளர் கூட்டம்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்க தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்க, ஏனைய கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர்கள் 30 -ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நிர்வாக செயலகத்தில் நடைபெறும். கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டுறவுப்பகுதிப் பொறுப்பாளர் மயூரன் கேட்டுள்ளார்.

## மரக்கறி உற்பத்தி வீழ்ச்சி

குடாநாட்டில் மரக்கறிகளின் விலை என்றுமில்லாதளவிற்கு உயர்ந்துள்ளது. உற்பத்திக் குறைவு, வெளி மாவட்ட மரக்கறிகள் குடாநாட்டிற்கு வராமை, இராணுவ நடவடிக்கை என்பன மரக்கறிகளின் தட்டுப்பாட்டுக்கும், விலை உயர்வுக்கும் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மரக்கறிகளை அதிகளவில் உற்பத்தி செய்யும் வலி வடக்குப் பகுதிகளான பலாலி, வயாவிளான், கோணாவளை, குட்டியப்புலம், குரும்பசிட்டி, கட்டுவன், குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, இளவாலைப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டுள்ளதால் இவ்விடங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் அறுவடை செய்யப்படாமலே கைவிடப்பட்டதாலும், புதிதாக உற்பத்தி செய்கை பண்ண முடியாததாலுமே உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. (32)

☐ அறிவியல் :

# வெளவால்கள்

-- கோகிலா மகேந்திரன்

"வௌவால் ஒரு பறவையோ மிருகமோ?" என்பது சிறு பிள்ளைகளிடம் பெரியவர்கள் கேட்கிற பிரபலமான கேள்விகளில் ஒன்று.

முலையூட்டிகள் எனப்படும் விலங்குகள் அநேகமாய்ப் பறப்பதில்லை பறவைகள் முட்டையிடுமே தவிரக் குட்டியீன்று பால் கொடுப்பதில்லை. வெளவால் பறக்கும்; அதே நேரம் குட்டியீன்று பால் கொடுக்கும். இதனால் ஏற்பட்ட சிக்கல்தான் முதலில் வந்த கேள்வியின் அடிப்படை.

இந்தச் சிக்கல் பலகாலம் பல மனிதர்களின் மூளையில் இருந்து வந்ததால் ... சில மனிதர்களுக்கும் 'வெளவால்' எனப்'பட்டம்' வைக்கும் நிலை இருந்தது. இப்போதும் இருக்கிறது. "இங்காலும் பாடி, அங்காலும் பாடும்" மனிதர்கள் பொதுவாக இந்தப்பட்டத்துக்கு அருகதை உடையவர்கள். தொழிலாளரோடு இருக்கும்போது, தொழிலாளர் பக்கம் சாய்ந்து கதைத்து. முதலாளியின் அறைக்குப் போனவுடன் முதலாளி சொல்வதெல்லாம் சரி என்று தலை அசைக்கிற ஒரு மனிதருக்குச் சக தொழிலாளர் 'வெளவால்' என்ற கௌரவப்பட்டம் சூட்டி அழைப்பது எனக்குத் தெரியும்.

வெளிச்சம் குறைவான இடங்களில், கூரைகளில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு கூட்டமாகக் காணப்படும் வெளவால்கள் முலையூட்டிகளே என்பதில் விஞ்ஞானிகளுக்குச் சந்தேகமில்லை சிலசமயங்களில் இருநூறுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இவை காணப்படும்.

இரவு ஏழு மணியளவில் பெரியவர்கள் எல்லாம் சத்தமிட்டுக்கொண்டே இரை தேடப் புறப்படும்போது, 'குட்டிகள்' வீட்டிலே தங்கி விடும். 'வேட்டையாடல்' முடிந்து அதிகாலையில் இவை தமது இருண்ட முகாமுக்குத் திரும்பும்போது மீண்டும் ஒரு 'அமளி துமளி' ஏற்படும். வீடு திரும்பியவர்கள் தத்தமது பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்குப் பக்கத்தில் இடம் எடுத்துக் கொண்டு பகல் தூக்கம் போட ஆரம்பிக்க ஏறத்தாழ ஒரு மணி நேரம் செல்லும்.

குளிர்காலத்தில் 'குடிபெயரும்' பழக்கமும் வெளவால்களுக்கு உண்டு. ஆறுமாத காலம் இவை பெயர் தெரியாத இடங்களிற் சென்று ஒளித்துவிடும். இந்தக்காலம் முடிந்து பழைய வீட்டுக்குத் திரும்பி வரும்போது இவை அமைதியிழந்து பதற்றமடைந்து காணப்படும். குட்டிகள் பல புதிதாய்ப் பிறந்துவிடும்

கூட்டமாகப் பகலிற் தூக்கம் போடும்போது ஒரு குறிப்பிட்ட வெளவால் அநேகமாக ஒரு குறிப்பிட்ட இடத்திற் தொங்கும் கூட்டத்தைச் சேராத ஒரு புதிய வெளவால் தற்செயலாய்ப் புதிய இடத்துக்கு வந்துவிடுமாயின் மற்றைய வெளவால்கள் எல்லாம் சேர்ந்து கத்தி அதைக் கலைத்துவிடும்.

பறப்பதற்கு அதிக சக்தி தேவை என்பதால், வெளவால்கள் அதிக சக்தியை வழங்கும் உணவுகளை உட்கொள்ளுகின்றன.

"மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூறி
இரந் தழைப்பார் யாவரு மங்கில்லை" என்று பாடிய ஔவையார் வெளவால் 'பழம்' தின்னுவதை அவதானித்திருக்கிறார். ஆனால் எல்லா வெளவால்களும் 'சைவம்' என்று கூறமுடியாது. உருவத்திற் சிறிய வெளவால்கள் சில பூச்சி உண்பவை. வேறு முலையூட்டிகளின் இரத்தத்தைக் குடிக்கும் வெளவால்களும் உள்ளன. இவை Vampire bats எனப்படும் சில சமயங்களில் இவை சிறு குழந்தைகளைத் தாக்கி இரத்தம் உறிஞ்சுவதும் உண்டு' தமது கூரான வேட்டைப் பல்லினால் குருதிக் குழாய்களைக் குத்தி இவை குருதியை உறிஞ்சிவிடும்.

'ரேடார்' முறைமூலம் தனது இருப்பிடத்தை அறியக்கூடிய ஒரேஒரு நிலம் வாழ் முலையூட்டி வெளவால்தான். இவை உருவாக்கும் உயர் சுருதி ஒலி (75,500—12,500Hz) மனிதனால் கேட்க முடியாத ஒலி. இந்த ஒலியின் தெறிப்பைக்கொண்டு வெளவால்கள் தமது இருப்பிடத்தை மட்டுமல்ல, பூச்சிகளின் இருப்பிடத்தையும், தமது பறக்கும் பாதையில் உள்ள தடைகளையும் கண்டறிகின்றன.

உலகம் பூராவும் பரந்து காணப்படும் வெளவால்கள் பெரும்பாலான இடங்களில் அதிக எண்ணிக்கையில் வாழ்வதுடன், வெற்றிகரமாயும் வாழ்கின்றன.

இரவு நேரப்பார்வைக்கு இசைவாக்கமடைந்துள்ள வெளவால்களின் கண்களுக்குப் பகல் நேரப்பார்வை இல்லை. அதாவது பல விடயங்களில் இவை 'குருடாக' இருந்துவிடும்.

என்ன இருந்தாலும் வெளவால் தனது சொந்தக்குட்டிகளில் வெகு கவனம். வாற் சவ்வினால் ஒரு பொக்கற் அமைத்து புதிதாய்ப் பிறந்த குட்டியை இந்தப் பொக்கற் தொட்டிலில் வைத்துக்கொள்ளும் 'அம்மா வெளவால்'. கூரையில தலைகீழாகத் தொங்கியபடியே தனது ஒரு செட்டையால் குட்டியை அணைத்துக்கொண்டு அதற்குப் பாலூட்டும் காட்சி அற்புதமானது.

'குட்டி' பிறந்து முதல் ஐந்து நாள்களில் அம்மா இரவு வேலைக்குப் போகும்போது குட்டியையும் தன்னுடன் அழைத்துச் சென்றுவிடும். அதற்குப்பிறகு - குட்டிக்குக் கண் திறந்துவிடும் ஆகவே அது தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை வந்து விடுவதால் குட்டியை வீட்டிலே விட்டுச் செல்லும் இவ்வாறு விடப்படும் குட்டிகள் இரவு முழுவதும் ஓடி ஆடிச் சத்தம்போட்டு, கலைத்துக் கலைபட்டு, விளையாடி பெரிய குளப்படி எல்லாம் செய்யும்.

குட்டிக்கு '23 நாள் வயது' வந்தவுடன் அது பறக்க ஆரம்பித்துவிடும். பழக்கமற்ற புதிய இடமாயினும் ... நூறு மைல் தூரத்திலிருந்துகூட ... வெளவால் தன் வீட்டுக்கு வழி கண்டு பிடித்துவிடும். சிலவேளை... மணித்தியாலத்துக்கு 45 மைல் கூடப் பறந்து தீர்த்துவிடும்.

மனிதர்களுடன் வெளவால்கள் சிநேகம் கொள்ளக்கூடியவை. பழக்கமான மனிதன் கையில் பூச்சிகளை வைத்திருந்தால் மிக லாகவமாக வந்து. மனிதனின் கையைக் காயப்படுத்தாமல் பூச்சிகளை அப்பிக்கொண்டு சென்றுவிடும்.

யார் யாருக்கு 'வெளவால்' என்று பட்டம் வழங்கலாம் என்று இப்போது ஒரு முறை மீள் சிந்தனை செய்து பாருங்கள்!

### குவைத்தில் வேலையிழந்த

# 18 ஆயிரம் இலங்கையர்கள்

# நஷ்டஈடு கோருகிறார்கள்!


குவைத் நாட்டில் வேலைவாய்ப்புகளை இழந்த இலங்கையரில் பதினெட்டாயிரம் பேர் நஷ்டஈடு பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அவர்கள் இக்கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம், சம்பளப்பாக்கிப்பணம், வங்கிகளின் வைப்பிருப்பு கிடைக்காமல் போனமை ஆகியவற்றுக்காகவே அவர்கள் நஷ்டஈடு கோரியுள்ளனர்.

மேற்படி தகவல்களை பணியகத் தலைவர் திரு. டேவிட் சொய்சா நேற்று வெளியிட்டார்.

## ஆற்றலாளர் அரங்கு



அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளை முன்னாள் தலைவர் க செல்லத்துரையின் 10-ம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப் படுகின்றது.

1953-ம் ஆண்டு யாழ் கச்சேரியில் ஊழியராகச் சேர்ந்த செல்லத்துரை அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளையை ஆரம்பித்து அவரே தலைவராகவும் செயற்பட்டு சக ஊழியர்களுக்கு பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார்

1980-ம் ஆண்டு சம்பள உயர்வுகோரி இடம் பெற்ற வேலை நிறுத்தத்தினால் தனது பதவியை இழந்த இவர் 1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் திகதி மரணமடைந்தார்.

சி. ஆறுமுகம்
தலைவர்
அ. பொ. சே. தொ. சங்கம்
யாழ் கிளை.

### இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்

## கல்வித் திணைக்களத்திற்கு சமுகம்தர அமைச்சு பணிப்பு

வடபகுதியில் நிலவும் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து தமது பகுதிகளில் இருந்து வெளியேறி இதுவரையும் பாடசாலைக்கு சமுகம் அளிக்காத ஆசிரியர்கள் தமக்கு அருகிலுள்ள பிரதம கல்வித் திணைக்களத்திற்கு சமுகமளிக்கும்படி கல்வியமைச்சு கேட்டுள்ளது.

யாழ் குடா நாட்டின் வலிவடக்கில் காங்கேசன்துறை, தெல்லிப்பழை, அம்பனைக் கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகளும் தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறைக் கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகளும் இன்னும் இயங்க முடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கொத்தணிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் முல்லைத்தீவுக் கொத்தணியைச் சேர்ந்த ஆசிரியர்களுமே இவ்வாறு சமுகமளிக்க வேண்டியவர்களாகும். (32)

## மாவீரர் புகைப்படக்காட்சியை காண மக்கள் முண்டியடிப்பு

யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் தமிழீழப் போராட்ட வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைப் பார்ப்பதற்காக பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாவீரர்களின் புகைப்படக் கண்காட்சியும் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் வீரமரணமெய்திய 1575 போராளிகளின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இவ் விரு புகைப்படக் கண்காட்சியையும் பார்க்க வந்திருந்த மக்கள் தொகை நண்பகலளவில் மிகையாக அதிகரித்திருந்தது.

இதேவேளை இக் கண்காட்சிகள் இன்னும் ஒன்பது நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (70)

### சேமிப்புச் சாதனங்கள் போதா

## இரத்த தானத்துக்குப் பலரும் முயன்றும் முடியவில்லை

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தன்று, தலைவர் மீது தாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் அவாவினால் உந்தப்பட்டு இரத்ததானம் செய்ய மந்திகை வைத்தியசாலைக்குச் சென்ற மக்கள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்ப நேர்ந்தது.

இரத்தத்தைச் சேமித்து வைக்கக்கூடியதாக போதிய மின்சாரம், குளிர் சாதனப் பெட்டிகள் இல்லாமையால் அதிகப்படியான மக்கள் திரும்ப நேர்ந்தது.

தலைவர் பிறந்த தினத்தையொட்டியும், காயமடைந்த போராளிகளுக்கு உதவும் நோக்குடனும் வல்வை கணபதிப்படிப்பகத்தால் இந் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (39)

### மக்கள் வங்கி ஊழியர் ஓய்வூதியம்

மக்கள் வங்கியிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களினதும் மரணித்த உத்தியோகத்தர்களின் மனைவிமாரினதும் ஓய்வூதிய வவுச்சர்கள் மக்கள் வங்கி யாழ் பிராந்திய தலைமை அலுவலகத்தை வந்தடைந்துள்ளன.

இவற்றிற்குரியவர்கள் மேற்படி அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளும்படி பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை

யாழ் மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர் முகப் பரீட்சை அடுத்த மாதமளவில் நடைபெறவுள்ளதாக அறியப்படுகின்றது

நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் இவை அதிபர்கள் மூலம் வெகு விரைவில் உரியவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதோர் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு மேன் முறையீடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (74)

### ஆசிரியகலாசாலை மாணவருக்கு அவசர அழைப்பு

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் இவ்வருடம் டிசம்பரில் நடைபெறவுள்ள குரு வித்தியாலய இறுதிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்திற்கு அவசரமாக அனுப்புவதற்கு இரண்டாம் வருட பயிலுநர்கள் அனைவரையும் உடன் கலாசாலைக்கு வருமாறு அதிபர் வை கா. சிவப்பிரகாசம் கேட்டுள்ளார்.

### அடுத்தது தமிழ்நாடு?

## அஸாமில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனமானது

அஸாம் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி திரு. ஆர் வெங்கட்ராமன் பிறப்பித்தார்.

அங்கு சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக இதற்குக் காரணம் காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, அஸாம், தமிழ்நாடு மாநிலங்களில் சட்டம், ஒழுங்கு நிலை சீராக இல்லை என்ற குற்றச்சாட்டை ஏற்கும் வகையில் பிரதமர் திரு. சந்திரசேகர் சமீபத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். எனவே தமிழ்நாடு மாநிலமும் இத்தகைய நடவடிக்கைக்கு உள்ளாக்குமா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

திருத்த வேலைக்கு குழு செல்கிறது

# வட பகுதிக்கான மின்சாரம் அடுத்த வாரம் கிடைக்கலாம்?

அடுத்த வார இறுதிப் பகுதியிலிருந்து வட பகுதிக்கான மின் விநியோகம் மீண்டும் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடபகுதிக்கு மின்சாரத்தை காவிவரும் 132 கே. வி. மின் இணைப்புக்கள் மாங்குளம் இராணுவ முகாமுக்கு அருகில் துண்டிக்கப்பட்டதையடுத்து கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர் மின் விநியோகம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

மாங்குளம் இராணுவ முகாம் பகுதியில் இத் துண்டிப்பு ஏற்பட்டிருந்ததினால் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலை மின்சார சபைக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளின் வசமானதையடுத்துத் திருத்த வேலைக்கிருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து திருத்த வேலைகளை, மதிப்பிடுவதற்கென இலங்கை மின்சார சபையின் குழுவொன்று இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளம் செல்லவுள்ளது.

மதிப்பீடு முடிவடைந்ததும் உடனடியாகவே திருத்த வேலை மேற்கொள்ளப்படுமெனவும் மின்சாரசபை வட்டாரங்கள் முரசொலிக்குத் தெரிவித்தன. (74)

1989-90 ஒதுக்கப்பட்ட

## மிகுதியான நிதியை 1991 க்கு பயன்படுத்துமாறு கோரிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியின் பொருட்டு 1989 ஆம் 1990 ஆம் வருடங்களில் ஒதுக்கப்பட்டு, பயன் படுத்தப்படாத நிலையில் உள்ள மிகுதி நிதியை 1991 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்படும் நிதியுடன் சேர்த்து அவ்வாண்டுக்குப் பயன்படுத்த திறைசேரிக்கு பணிப்புரை செய்து உதவ வேண்டும் என வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் எம். பிக்கள் கடிதமூலம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர்.

இக்கடிதத்தில் 1989 இல் ஒதுக்கப்பட்ட நிதியினை 1990 க்கு பயன்படுத்தக் கூடியவாறு முன்னர் திறைசேரிக்குப் பணிப்புரை வழங்கியதற்கும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

உணவு...

யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

திருமலை சென்றுள்ள குமண கப்பல் திரும்பிய பின்னரே மிகுதிப்பணம் இலங்கை வங்கிக்கும் ஏனைய திணைக்களங்களுக்கும் வழங்கப்படும் எனவும் அறியப்படுகிறது. (66)

இப்படியும்—

பின்னரே தாம் ''அதி உத்தம''ரின் கூட்டத்துக்கு ஆள் சேர்க்க அழைக்கப்பட்ட விடயம் அறிந்து ஏமாற்றமடைந்தனராம்.(66)

சுன்னாகம்—

ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலினால் கீரிமலையைச் சேர்ந்த சுந்தரம் என்பவரின் வீடு சேதமடைந்தது.

இதே வேளை கீரிமலை கிருஷ்ணன் கோவில் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளைத் தகர்த்து வருகின்றனர். (ப-2, 48,ப-10,48)

வலி. கிழக்கில்...

கொள்ளப்பட்டன.

அச்சுவேலியில் பிற்பகல் 4. 30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீதிகள் சேதமுற்றது. உயிர்ச் சேதமோ, உடைமைச் சேதமோ ஏற்படவில்லை. (32, ப-24)

யாழ் ஆஸ்பத்திரிக்கு எரிபொருள்

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு ஒரு மாதத்துக்கு 25 பெரல் எரிபொருள் வழங்கக் கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது.

## உலக அரங்கில்

### பிரிட்டிஷ் பிரதமராக ஜோன்மேஜர்

பிரிட்டனின் புதிய பிரதமராக ஜோன்மேஜர் (47) நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பக்கிங்ஹாம் அரண்மனையில் எலிசபெத் ராணியார் முன்னிலையில் இவர் தனது சத்தியப்பிரமாணத்தை எடுத்துக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து மேஜர் 10, டவுனிக் வீதியில் அமைந்த பிரதமர் அலுவலகத்திற்குச் சென்று தனது முதல் நாள் பணியை ஆரம்பித்தார். முதன்முறையாக வயதில் இளையவரான ஒருவர் இவ்வலுவலகத்தில் நுழைந்தமை பிரிட்டனின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ததொன்றாகும்.

இவரது முதற் பணியாக புதிய அமைச்சரவையை தேர்ந்தெடுப்பதே முக்கியமாகவுள்ளது. வாக்கெடுப்பில் தம்முடன் போட்டியிட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஹசட்டைன், வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் ஆகியோர் அமைச்சரவையில் இடம்பெறலாம்

ஜோன்மேஜர் இங்கிலாந்தில் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். தனது பதினாறாவது வயதில் பாடசாலையை விட்டு வெளியேறி நீர்க் குழாய்கள் பொருத்துபவராகவும், பின்னர் பஸ் நடத்துநராகவும் பணியாற்றினார். கணக்கில் இவர் 'வீக்' ஆக இருந்ததால் நடத்துநர் பதவியையும் விரைவில் இழந்தார். பின்னர் மாநகரசபைத்தொழிலாளராக இருந்து 1950 களில் கன்சர் வெட்டிவ் கட்சியில் சேர்ந்து கொண்டார். பிரதமர் தட்சரின் ஆட்சிக் காலத்தில் இவர் திறமை வாய்ந்த நிதியமைச்சராக விளங்கினார். அரசியலில் எதிரிகளே இல்லாதவர்.

### புனர்வாழ்வு அமைச்சு வெளியிட்டுள்ள விபரம் வருமாறு:

| மாவட்டம் | நலன் காக்கும் நிலையங்கள் | குடும்பங்களின் எண்ணிக்கை | தங்கியிருப்போர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 352 | 71, 010 | 3, 55, 000 |
| முல்லைத்தீவு | 32 | 11, 185 | 55, 925 |
| மன்னார் | 46 | 21, 475 | 1, 04, 375 |
| கிளிநொச்சி | 16 | 8, 810 | 44, 050 |
| வவுனியா | 25 | 14, 919 | 48, 155 |
| மட்டக்களப்பு | 56 | 13, 769 | 61, 414 |
| அம்பாறை | 32 | 5, 428 | 27, 274 |
| திருகோணமலை | 32 | 8, 980 | 38, 421 |
| புத்தளம் | 40 | 7, 566 | 40, 597 |
| கொழும்பு | 8 | 628 | 3, 138 |
| அனுராதபுரம் | 58 | 6, 563 | 28, 023 |
| பொலநறுவை | 10 | 1, 960 | 9, 800 |
| குருநாகல் | 18 | 662 | 3, 529 |
| | 725 | 1, 72, 945 | 8, 19, 701 |

(66)

சேதமடைந்த—

பர்களினால் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென இவ் அமைச்சு சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளது. (66)

தாக்குதல்—

நடைபெற்றது

இதன் பின்னர் கூட்டம் நடந்த இடத்திலிருந்து 20 மீற்றர் தூரத்தில் ஷெல் விழுந்து வெடித்தது. இதனால் கூட்டத்தைக் கலைக்காது தொடர்ந்து கூட்டம் நடாத்துமாறு விடுதலைப்புலிப் பிரமுகர்களிடம் கேட்டதைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது. (19, 71)

முல்லை.—

(21) சிவன் கோவிலடி ஒட்டுசுட்டான்.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலும் காலை 9 மணிமுதல் 10 மணிவரை விமானங்கள் கடும் தாக்குதலை நடாத்தியுள்ளன.

சாஸ்திரி கூழாங்குளம், நொச்சிமோட்டைப் பாலம், பூந்தோட்டம், மகாரம்பைக் குளம், காத்தன் சின்னக் குளம், நெடுங்குளம். பேயடிக் கூழாங்குளம், விளக்குவைத்த குளம், ஆகிய இடங்களில் தாக்குதல் நடாத்தப்பட்டன.

இதில் ஒரு வீடு சேதமடைந்தது. அத்துடன் பேயடிக் கூழாங்குளம் பிரதேச சபைக் கட்டிடமும் சேதமடைந்தது. (71,38)


## காணவில்லை

கெருடாவில் - சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சீவரத்தினம் (மான்- Mann) கடந்த 18 11. 90 முதல் காணவில்லை. இவர் ஒரு சித்த சுவாதீனம் அற்றவர். கடைசியாக சிவப்பு நிறச்சேலை, வெள்ளை நிற பிளவ்ஸ், தலையில் துணி அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் விலாசங்களில் தொடர்புகொள்ளவும்.

அம்பாள் பார்மஸி, சாவகச்சேரி.

எம். ரி. மான் (Mann), கெருடாவில், சாவகச்சேரி.

11149



## காலமானார்

### திரு. முத்தையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர், உசன், மிருசுவில்)

திரு.மு. சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்) 28.11.90 அன்று காலமானார். அன்னார் சிந்தவனின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் திருமதி மீரா தேவரஞ்சன் (இலங்கை வர்த்தக வங்கி யாழ்ப்பாணம்) சிறீதரன், திருமதி மாலினி சிவபாலன் (sey chelles), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சற்குணசிங்கம் தேவரஞ்சன் (இலங்கை வர்த்தக வங்கி, கொழும்பு) N சிவபாலன் (sey chelles), திருமதி சோமகலா சிறீதரன் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29 . 11 . 90) 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

உசன், மிருசுவில்.

திருமதி மீரா தேவரஞ்சன் (மகள்)

சிறீதரன் (மகன்)

11153



## 10-ம் ஆண்டு நினைவாக

தோற்றம் 05 — 06 — 1928



மறைவு 29 — 11 — 1980

### கந்தையா செல்லத்துரை

(அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்க முன்னாள் யாழ்கிளைத்தலைவர்)

தொழிலாள வர்க்கத்தின் தோழனாகி
தொல்லை பல பட்டுமே தொண்டு செய்தீர்
வறுமையால் யாரேனும் வருந்தல் கண்டு
வகையது சொல்லியே வாழவைப்பீர்
கண்மீதில் உறக்கமின்றிக் கடமை பார்த்தீர்
கடைசியில் காலன் தான் ஜெயித்துவிட்டான்
வெண்ணிறத்தில் உடைதான்விரும்பிப் போட்டீர்
எண்ணிஎண்ணிப்பார்க்கின்றோம் ஏக்கம் கொண்டே
எப்படித்தான் மறப்போம் தலைவா, உன்னை
''தனக்குவமை இல்லாத் தலைவரே'' என்றும்
சாந்தி சாந்தி

11152

அ. பொ. சே. தொ. ச. யாழ் கிளை.


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற் நிறுவனத்தினரால் யாழ். கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 29-11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.